**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 112/2020 |
| Name | : Girishkumar |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கேரளா பாலக்காடு கொடுவாயூரில் வசித்து வருகிறேன். டீ கடையில் வேலை செய்கிறேன். 2019 ம் ஆண்டு மடத்துக்குளம் சூர்யா பேக்கரியில் வேலை செய்து வந்தேன் 21.04.2019 ம் தேதி மாலை 04.00 மணிக்கு உணவு சாப்பிடுவதற்காக TN 78 R 468 Splendor இருச்சக்கர வாகனத்தில் மேற்கே இருந்து கிழக்காக விஜயன் என்பவர் ஓட்ட நான் பின்னால் உட்கார்ந்து சென்று கொண்டிருந்த போது மடத்துக்குளம் தாலுக்கா அலுவலகம் முன்பு ஓரமாக சென்று கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்காக அதிவேகமாக வந்த இருசக்கர வாகனம் TN 59 2982 வாகனம் எங்கள வண்டியில் மோதியது இருவரும் கீழே விழுந்தோம் விஜயனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது எனக்கு காலில், தலையில் காயம் ஏற்பட்டது விஜயன் ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலை அரசு மருத்துவமனைக்கும், நான் வேறு ஒரு இருசக்கர வாகனத்தில் மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நான் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றேன். விஜயன் சில நாட்கள் கழித்து இறந்துவிட்டார். நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும்

புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்